(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 4(3).]**

# பாராளுமன்றத்தின்
# 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2026 ஜூலை 24, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2026 ஆகஸ்ட் 04, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 240 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2026 சனவரி 01 ஆம் திகதியில் தொடங்கி 2026 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடன் தொகையிலிருந்து ரூபா எழுபத்து ஓராயிரத்து எழுநூறு மில்லியனை (ரூபா 71,700,000,000) விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **தலைப்பு** | **240** - | தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **02** - | அபிவிருத்திச் செயற்பாடுகள் | |
| | | மீண்டெழும் செலவினம் | ரூ. 71,700,000,000 |
| | | **மொத்தச் செலவினம்** | **ரூ. 71,700,000,000** |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2026 ஜூலை 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2026 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்க.

1 ஆம் மற்றும் 2 ஆம் இலக்கக் குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 520,000,000,000 ஆகும்.

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(1) மற்றும் 41இ(1) ஆம் உறுப்புரைகளின் பிரகாரம், அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்திற்கமைய, 2026.02.05 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பணிகளும் கடமைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், சம்பளம் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாதலாலும்;

சனாதிபதியவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2026.06.20 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அமப/26/1258/801/020 ஆம் இலக்க மற்றும் 2026.07.06 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, கணக்காய்வாளர் தலைமையதிபதி, திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்களுக்கு பின்வருமாறு சம்பளத்தைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்:—

(அ) கணக்காய்வாளர் தலைமையதிபதி, திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்களை குறித்த பதவிக்கு நியமித்த 2026.02.05 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் பிரகாரம், SL-4 சம்பள அளவுத்திட்டத்தின் (175,000-12x5,300-238,600) 5 ஆவது சம்பளப் படிநிலையில் நிறுவி, அதற்கமைய குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை II இற்கமைவாக ரூபா 196,200/- அளவான சம்பளப் படிநிலைக்கு ஒத்ததாக, அட்டவணை III இற்கமைவாக பிரகாரம் ரூபா 170,528/- சம்பள படிநிலையில் நிறுவி சம்பளத்தைச் செலுத்துவதற்கும்;

(ஆ) அச்சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களை செலுத்துவதற்கு மற்றும் மேற்குறித்த சுற்றறிக்கையில் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் உட்பட்டு சம்பள மாற்றத்தை மேற்கொள்வதற்கும்.

அதற்கேற்ப, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, திருமதி எல்.எஸ்.ஐ. ஜயரத்ன அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*

விலங்குகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## 2026 ஆகஸ்ட் 05, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

# 2026 ஆகஸ்ட் 07, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 128/2026

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— வட மாகாணத்தின் வன்னி மற்றும் யாழ்ப்பாணத் தீவகப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியப் பற்றாக்குறை மற்றும் டிஜிட்டல் கல்விசார் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல்,— வன்னி மற்றும் யாழ்ப்பாணத் தீவகப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை மாவட்ட ரீதியிலான நியமனங்களின் மூலம் நிரப்புவதற்கும், அப்பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் பொருட்டு நவீன கணினி ஆய்வுக்கூடங்கள் மற்றும் முறையான இணைய வசதிகளை ஏற்படுத்துவதற்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மேலதிக கல்வி வாய்ப்புகளை வழங்கும் வகையில் சிறப்பு உதவித்தொகைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 129/2026

கௌரவ ரீ. கே. ஜயசுந்தர,— இலங்கையின் பாரம்பரிய கைத்தொழில்களை மேம்படுத்துதல்,— மூங்கில், பிரம்பு, கோரை, கித்துள் போன்ற தாவரங்களின் தண்டுகள், போலித்தண்டுகள் மற்றும் இலைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பாரம்பரிய கைத்தொழில்கள் மூலம், இலங்கையின் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறைகளுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கமுடியும் என்பதாலும், இலங்கையின் கைத்தொழில் மற்றும் சுற்றுலாத் துறைகளில் தற்போது ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சிக்கு இணையாக அத்தகைய பாரம்பரிய கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு அவசியமான தொழில்நுட்பத்தை வழங்குவதற்கும், அவற்றின் உற்பத்திக்கான சந்தையை விரிவுபடுத்துவதற்கும், அவற்றிற்கு உத்தியோகபூர்வமாக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும், பாரிய அளவிலான கைத்தொழில்களை உருவாக்குவதற்காக மேற்படி தாவரச் செய்கைகளை ஊக்குவிப்பதற்கும், அதற்கான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கும், அக்கைவினைஞர்களின் உழைப்பிற்கும், திறமைக்கும் உயர்ந்த மதிப்பளிக்கவும், அவர்களின் ஓய்வுகால வாழ்க்கையைப் பாதுகாக்கும் திட்டமொன்றை உருவாக்கவும் தேவையான செயற்பாட்டுப் பொறிமுறை ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 130/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— புத்தளம் புகையிரதப் பாதையில் புகையிரத சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் எரிபொருள் விலைகள் உயர்ந்துள்ள நிலையில், பொதுமக்கள் பெருமளவில் பொதுப் போக்குவரத்து சேவைகளை நாடும் போக்கு காணப்படுவதாலும், அத்துடன் தினமும் பெருமளவானோர் தொழில் நிமித்தமாகவும் வர்த்தக தேவைகளுக்காகவும் புத்தளம் பாதையில் பயணம் செய்வதாலும், அப்பயணிகளுக்கு போதுமான சேவையை வழங்கும் நோக்கில் புத்தளம் கொழும்பிற்கிடையிலான புகையிரத சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# 2026 ஆகஸ்ட் 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1184/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்ச்சோலை வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலையொன்று இயங்கி வந்ததை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அந்தப் பாடசாலை மாணவர்கள் க.பொ.த (சாதாரண தர) பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்கு இறுதியாக தோற்றிய ஆண்டுகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) தற்போது மேற்படி பாடசாலையின் பெயர் யாதென்பதையும்;

(v) அந்தப் பாடசாலையின் பெயரை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள் யாவர் என்பதையும்;

(vi) அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) அந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட திகதி யாதென்பதையும்;

(viii) அந்தப் பாடசாலையின் பெயருக்காக அந்தப் பாடசாலையின் தாபகர் அல்லது பாடசாலையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக திகழ்ந்தவரின் பெயரைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1673/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சின்ன உல்லை, அறுகம்பே, சர்வோதயபுரம், ஜலால்தீன் சதுக்கம், குடாக்கள்ளி, விஸ்கி பொயிண்ட், கொட்டுக்கல் மற்றும் லைட் ஹவுஸ் போன்ற சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா விடுதிகளை நடத்துபவர்களின் காணிகளுக்கு அரசாங்கம் சரியான முறையில் நில அளவீடுகளை செய்து உறுதிகளை வழங்கவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அத்தகைய ஆவணங்கள் இல்லாத சுற்றுலா விடுதிகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்ய முடியாது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அதன் காரணமாக, பொத்துவில் பிரதேச சபைக்கு ஏற்புடைய வியாபார வரிகளை அறவிட முடியாமல் உள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், பிரதேச செயலாளரின் அனுமதியின் கீழ் தனியார் நில அளவையாளர்கள் மூலம் நில அளவை செய்து 'உருமய' உறுதிகளை விரைவாகப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்க முடியுமா என்பதையும்;

(v) அவ்வாறு நில அளவையாளர்களால் தயாரிக்கப்படும் வரைபடத்தைப் பயன்படுத்தி அந்தக் காணிகளை 'உருமய' திட்டத்தில் சேர்க்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1681/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தபால் திணைக்களம் தாபிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) தற்போது இந்நாட்டில் அமைந்துள்ள பிரதான மற்றும் உப தபால் அலுவலங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது தபால் திணைக்களத்தில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி திணைக்களத்தில் தற்போது நிலவும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அஞ்சல் விநியோகத்திற்காக தபால் ஊழியர்களுக்கு உந்துருளிகள் வழங்கப்பட வேண்டும் என்றொரு கோரிக்கை காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கோரிக்கை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1910/2026

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பயிரிடப்படுகின்ற பழ வகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி பழ வகைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பழ வகைகளுள் ஏற்றுமதியின் காரணமாக உள்நாட்டு சந்தையில் பற்றாக்குறையாகவுள்ள பழ வகைகள் யாவையென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் பழ ஏற்றுமதியினூடாக ஈட்டப்பட்ட வருமானம் எவ்வளவென்பதையும்;

(v) இந்நாட்டில் பழப் பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2027/2026

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கேகாலை மாவட்டத்தில், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தில் முதலாவது கூட்டுறவுச் சங்கம் பதிவுசெய்யப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமான கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவற்றுள் தற்போது செயற்படும் நிலையிலுள்ள மற்றும் செயற்படாத நிலையிலுள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கிகளும் கடைகளும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) புளத்கொஹுபிட்டிய மற்றும் யட்டியாந்தோட்டை கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுசெய்யப்பட்ட ஆண்டு வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி சங்கங்களுக்கு உரிய கூட்டுறவு சங்கக் கடைகள், கிராமிய வங்கிகள் மற்றும் கோப்சிட்டிகளது எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி சங்கங்களுக்குச் சொந்தமான செயற்படும் மற்றும் செயற்படாத நிலையிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கடைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கடைகள் செயற்படாத நிலைக்கு தள்ளப்பட்டமைக்கான காரணிகள் யாவையென்பதையும்;

(v) கடந்த 10 வருட காலப்பகுதியில் மேற்படி கூட்டுறவுச் சங்கங்களின் வருடாந்த கணக்காய்வுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vi) இன்றேல், மேற்படி விடயம் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2094/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்தில் வாடகை வீடுகளில் வசிக்கும், நெருங்கிய உறவினர்கள் மற்றும் நிலையான வாழ்வாதாரம் இல்லாத முதியோர்களைக் கண்டறிவதற்கான முறையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதுவரை அடையாளம் காணப்பட்ட அத்தகைய முதியோர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அம்முதியோர்களின் பாதுகாப்பிற்காக கொழும்பு மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அந்நிறுவனங்களுக்கு அரசாங்கம் வழங்கும் உதவி யாதென்பதையும்;

(v) முதியோர்களின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினையானது ஒட்டுமொத்தமாக ஆண்டுதோறும் அதிகரித்து வரும் போக்கு காணப்படுவதை அறிவாரா என்பதையும்;

(vi) முதியோர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களுக்காக முன்மொழியப்பட்ட எதிர்காலத் திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அந்தத் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2108/2026

கௌரவ சுனில் றாஜபக்ஷ,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் சொந்தமாக இருந்த காணிகளைக் கையகப்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்களில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை, கருத்திட்ட வாரியாக வெவ்வேறாக யாது;

(iii) ஒவ்வொரு கருத்திட்டத்தின் கீழும் வீடுகளுக்கும் காணிகளுக்கும் உறுதிகள் வழங்கப்பட்டுள்ள அத்துடன் வழங்கப்படாதுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) இதுவரை உறுதிகள் வழங்கப்படாதுள்ள பயனாளிகளுக்கு உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2116/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டிற்கான தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அறிக்கைப்படி மாற்றுத்திறனாளிகள் சனத்தொகை, ஒவ்வொரு மாற்றுத்திறன் வாரியாக எண்ணிக்கை அடிப்படையிலும் சதவீத அடிப்படையிலும் வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி சனத்தொகையில், ஊழியப் படையைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி எண்ணிக்கை, பாலினம் மற்றும் மாற்றுத்திறன் வகை வாரியாக வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது அரச துறை மற்றும் தனியார் துறை தொழில்களில் ஈடுபடும் மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை, வெவ்வேறாக யாது?

(ii) 2026ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வெளியிடப்பட்ட அரச சேவையில் 3% என்ற அனுமதிப்பங்கை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) மாற்றுதிறனாளிகளில் வேலைவாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி மாற்றுத்திறனாளிகளை அரசதுறை மற்றும் தனியார்துறை வேலைவாய்ப்புகளில் ஈடுபடுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2172/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் கீழ் உள்ளடங்கும் தொழில்கள் யாவை என்பதையும்;

(ii) அச்சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) தற்போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்கள் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளுக்குத் தடையாக அமைந்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனின், வெற்றிடங்களை நிரப்புவதற்கும் தொழில்சார் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2177/2026

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1996 ஆம் ஆண்டு தொடக்கம் போதைப்பொருளுக்கு அடிமையான பெண்களுக்காக நிறுவப்பட்ட அரசாங்கத்தின் வதிவிட சிகிச்சை நிலையங்கள் அனைத்தும் இன்றளவில் தோல்வியடைந்த நிலையில் மூடப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) 2025 ஆம் ஆண்டில் 'தலங்கம' சிகிச்சை மற்றும் புனர்வாழ்பு நிலையத்தில் பெண்களுக்கான சிகிச்சை பிரிவில் ஏற்பட்ட பாதுகாப்பு சார்ந்த பிரச்சினை ஒன்றின் காரணமாக அதனை மூட வேண்டியேற்பட்டது என்பதையும்;

(iii) போதைப்பொருளுக்கு அடிமையான ஆண்களுக்குப் பயன்படுத்தப்படும் வழிமுறைகளையே அவ்வாறே பெண்களுக்கும் பிரயோகிப்பதன் காரணமாக, பெண்களுக்கே உரித்தான உயிரியல், உளவியல், கர்ப்பநிலை மற்றும் குழந்தையின் பாதுகாப்பு போன்ற தேவைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இன்றளவில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் கீழ் வதிவிட சிகிச்சை பெற்றுவரும் பெண்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) 2025 ஆம் ஆண்டின் வன்முறைச் சம்பவத்தின் பின்னர் பதவி விலகிய பணியாட்தொகுதி அங்கத்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) பெண்களுக்கேற்ற விஞ்ஞானபூர்வமான சிகிச்சை கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கும், கொழும்பு மாவட்டத்தில் போதைப்பொருள் பயன்படுத்தும் நகர்ப்புற வறிய ஆண்கள் இலகுவாக அணுகக்கூடிய சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையமொன்றை தலைநகரில் அமைப்பதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஆகஸ்ட் 18, செவ்வாய்க்கிழமை)**

887/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலகத்தில் விண்ணப்பத்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம்மக்களுக்கு அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி உரிமம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

888/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணபித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு 'உருமய' அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை 'உருமய' அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

889/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' அல்லது 'காணி உரிமம்' இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் மக்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(v) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஆகஸ்ட் 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

32/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி விமான நிலையம் திறக்கப்பட்ட திகதியிலிருந்து இது வரையிலான வருடாந்த செலவு மற்றும் வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) விமான நிலையத்தின் வருடாந்த வருமானத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

139/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சேதனப் பசளைகளின் அளவு யாது;

(ii) மேற்படி பசளைகளை இறக்குமதி செய்துள்ள கம்பனிகள்/நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(iii) அதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு;

(iv) கணக்காய்வு அறிக்கைகளுக்கு அமைவாக மேற்படி பசளை இறக்குமதி தொடர்பான பெறுகை நடைமுறை காரணமாக ஏற்பட்ட நட்டம் எவ்வளவு;

(v) அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களின் பெயர்கள் மற்றும் பதவிப் பெயர்கள் யாவை;

(vi) அது தொடர்பாக கணக்காய்வு அறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

684/2025

கௌரவ ரோஹண பண்டார,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் காணப்படும் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) அந்த மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவமிக்க இடங்கள் யாவை என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டிலிருந்து இது வரை அந்த மாவட்டத்தில் அறிக்கையிடப் பட்டுள்ள தொல்பொருள் திருட்டு மற்றும் அழிப்புகள் தொடர்பான சம்பவங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மாவட்டத்துக்குள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள திணைக்கள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) மாவட்டத்துக்கான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(vi) நிலவும் ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1495/2025

கௌரவ சாணக்கியன் இராசபுத்திரன் இராசமாணிக்கம்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைகள், மனித உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதம் விளைவிப்பதை அறிவாரா;

(ii) மேற்படி சேதங்களைத் தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) மாவட்டத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ள யானை தடுப்பு வேலியின் மொத்த நீளம் யாது;

(iv) ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள யானை தடுப்பு வேலிகளை உடைத்துத் தரைமட்டமாக்கி குடியிருப்புகள் மற்றும் பயிர் நிலங்களுக்குள் காட்டு யானைகள் உள்நுழைவதை அறிவாரா;

(v) அதனைத் தடுப்பதற்காக இவ்வருடத்தில் மேலதிக யானை தடுப்பு வேலிகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாவட்டத்தில் புதிதாக 05 வட்டார வன அலுவலகங்களை தாபிப்பதற்குரிய சாத்தியக்கூறு உள்ளதா;

(ii) 14 உப வட்டார வன அலுவலகங்களைத் தாபிப்பதற்குரிய சாத்தியக்கூறு உள்ளதா;

(iii) அவற்றுக்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2055/2026

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள 'மரகல' மலைத்தொடர், சுற்றாடல் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிலப்பரப்பு யாதென்பதையும்;

(iii) மேற்படி சுற்றாடல் பாதுகாப்பு வலயத்திற்குரிய எல்லைகளைக் குறிக்கும் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி மலைத்தொடரின் ஒதுக்கப்பட்ட எல்லைக்குள் சட்டவிரோதமான முறையில் குடியேற்றங்கள் அல்லது அனுமதியற்ற பயிர்ச்செய்கை நிலங்களை நடாத்திச் செல்வது குறித்து அறிக்கையிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கும் ஒதுக்கப்பட்ட நிலத்தைப் பாதுகாப்பதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மரகல மலைத்தொடரைச் சார்ந்த பிரதேசம் சுற்றாடல் பாதுகாப்பு வலயமொன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவ்வாறு பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர், காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தினால் அது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட நிலப்பரப்பிற்குள் தனியார் காணிகளாக நிர்ணயம் செய்யப்பட்ட காணிகள் எவையேனும் உள்ளனவா என்பதையும்;

(iv) சுற்றாடல் பாதுகாப்பு வலயமொன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டதன் காரணமாக, நிர்ணயம் செய்யப்பட்ட தனியார் காணிகளைப் பயன்படுத்துவதற்குத் தடைகள் ஏற்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2113/2026

கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளுக்கு ஆசிரிய உதவியாளர்களை இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள மேற்படி ஆட்சேர்ப்புக்களை மீள ஆரம்பிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரிய உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பில் மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின், அவை யாவையென்பதையும்;

(v) தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் எண்ணக்கருவின் பிரகாரம், பெயர்ப்பலகைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பெருந்தோட்டப் பாடசாலைகள் தேசிய கல்வி முறைமைக்குள் உள்ளீர்க்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2128/2026

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை தற்போது வரை பங்கேற்றுள்ள டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) தற்போது இலங்கையிலுள்ள டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடாத்துவதற்கு பொருத்தமான மைதானங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்தில், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடாத்துவதற்கு பொருத்தமான மைதானங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றியுள்ள வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி வீரர்களின் பெயர்களும், இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய பாடசாலைகளும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) டீ. பி. வெலகெதர மைதானம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடாத்துவதற்கு பொருத்தமானதா என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டரங்கில் நடாத்தப்பட்டுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டரங்கில் சர்வதேச கிரிக்கெட் போட்டியொன்று இறுதியாக நடாத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி விளையாட்டரங்கு எந்த நிறுவனத்திற்கு சொந்தமானதென்பதையும்;

(v) தற்போது மேற்படி விளையாட்டரங்கு வேறு நிறுவனமொன்றிற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், இந்த உரிமை மாற்றம் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

2139/2026

கௌரவ தினேஷ் ஹேமந்த,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025 ஆம் ஆண்டில் நாய்க்கடி காரணமாக நீர்வெறுப்பு நோயால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டில் நீர்வெறுப்பு நோயாளர்களுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் தடுப்பூசியேற்றல் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆண்டில் நாய்களை மலடாக்குவதற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி யாதென்பதையும்;

(iv) அந்நிதியைப் பயன்படுத்தி மலட்டுத்தன்மைக்கு உட்படுத்தப்பட்ட தெரு நாய்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) நாய்களை மலடாக்குவதற்கான வேலைத்திட்டத்திற்காக 2026 ஆம் ஆண்டில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி யாதென்பதையும்;

(vi) அந்நிதியைப் பயன்படுத்தி 2026ஆம் ஆண்டில் இதுவரை மலட்டுத்தன்மைக்கு உட்படுத்தப்பட்ட தெருநாய்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் நாய்களை மலடாக்குவதற்கான வேலைத்திட்டத்தின் தன்மை குறித்து சிறு விளக்கத்தை தர முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2181/2026

கௌரவ சமிந்த லலித் குமார,— பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின் திவுலபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 44B, களுஅக்கல கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கெபெல்லகஹலந்த பொது மயானத்திற்குச் சொந்தமான காணியின் ஒரு பகுதி, தனிநபரொருவரினால் பலவந்தமாக கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி காணியை மீண்டும் பொது மயானத்தின் பயன்பாட்டிற்கு பெற்றுத் தருவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்பிரதேச மக்களும் பிரதேச செயலாளரும் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சிற்கு கோரிக்கை விடுத்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பொது மயானத்தை பலவந்தமாக பயன்படுத்துகின்ற ஆட்களிடமிருந்து அவ்வாறு பயன்படுத்திய காலப்பகுதிக்காக ஏதேனும் கட்டணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அரசுக்குச் சொந்தமான காணியொன்றை தனிநபரொருவர் பலவந்தமாக கையகப்படுத்தியமை தொடர்பில் சம்பந்தப்பட்டவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2188/2026

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ‘அபி வெனுவென் அபி’ நிதியம் எச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது என்பதையும், அதன் பிரதான பணிப்பொறுப்புகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிதியத்தினூடாக வீடமைப்பு உதவியைப் பெறத் தகுதியுடைய ஆயுதப்படை அங்கத்தவர்கள் யாவரென்பதையும்;

(iii) மேற்படி நிதியத்தின் நிருவாக மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் யாவரென்பதையும்;

(iv) மேற்படி நிதியத்தின் பிரதான வருமான மூலங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிதியத்தின் நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகள் அரசிறைக் கொள்கைக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதையும், அந்நிதிதியம் அரசாங்கக் கணக்காய்வுக்குட்படுத்தப்பட வேண்டுமென்பதையும், அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ‘முழுமையான வீடமைப்பு’ மற்றும் ‘பகுதியளவிலான வீடமைப்பு’ கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) வீடொன்றைக் கொள்வனவு செய்வதற்கோ, அல்லது நிர்மாணிப்பதற்கோ, வழங்கப்படும் நிதியுதவியின் தொகை எவ்வடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது என்பதையும்;

(iii) இதுவரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) கடன் சுமையால் பாதிக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு மேற்படி நிதியத்தின் ஊடாக நிதிசார் நிவாரணங்களை வழங்குவதற்கான இயலுமையுள்ளதா என்பதையும்;

(v) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஆகஸ்ட் 19, புதன்கிழமை)**

890/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2017.01.01 திகதி தொடக்கம் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேசச் செயலாளர் பிரிவில், அரசாங்கத்தினால் ‘அளிப்புப் பத்திரங்கள்’ அல்லது ‘காணி உரிமம்’ பத்திரங்கள் ஊடாக வழங்கப்பட்ட அரச காணிகளில் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

891/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகத்தில் விண்ணப்பத்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி உரிமம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

892 /2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2019.01.01 தொடக்கம் 2025.03.31 வரையில் கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) கடந்த அரசாங்கத்தின் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியினுள் குறிப்பிட்ட நபர்களுக்கு 'உருமய' அறுதி உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' அறுதி உறுதியை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு இதுவரை 'உருமய' அறுதி உறுதி வழங்கப்படாததற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஆகஸ்ட் 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

369/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வளிமண்டலவியல் திணைக்களத்தில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி திணைக்களத்தினால் வானிலைத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் ஒரு நாளில் தரவுகள் பெற்றுக்கொள்ளப்படும் தடவைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) திணைக்களம் தாம் பெற்றுக்கொள்ளும் தகவல்களை பரிமாறிக் கொள்ளும் சர்வதேச நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) வானிலைத் தகவல்களைப் பெறுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற முறைமைகள் மற்றும் தரவுகளை சர்வதேச நிறுவனங்களுடன் பரிமாறிக்கொள்வது சர்வதேச தர நியமங்களுக்கு அமைவாக இடம்பெறுகின்றதா என்பதையும்;

(v) மேற்படி திணைக்களத்தை முன்னேற்றுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

473/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் நிறுவப்பட்டுள்ள மொத்த சுதந்திர வர்த்தக வலயங்களின் எண்ணிக்கையையும் மற்றும் ஒவ்வொரு வலயத்திலும் இயங்குகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கையையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அந்த தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்தியின் தன்மை யாதென்பதையும்;

(iii) அத்தகைய உற்பத்திகளில் தயார் செய்யப்பட்ட ஆடைகள் மற்றும் ஏனைய ஏற்றுமதி உற்பத்திகளும் உள்ளடங்குகின்றனவா என்பதையும்;

(iv) அந்த தொழிற்சாலைகளில் பணி புரிகின்ற ஆண் மற்றும் பெண் ஊழியர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 05 வருடங்களில் அத்தகைய உற்பத்திகள் மூலம் ஈட்டப்பட்ட ஏற்றுமதி வருமானங்களை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) ஏற்றுமதிப் பொருட்களை ஊக்குவிக்கும் போது ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

654/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை சிகரெட்டுகள் மீதான வரி எத்தனை தடவைகள் திருத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அத்திருத்தங்கள் யாவை என்பதையும்;

(iii) சிகரெட்டுகள் மீது அறவிடப்படும் வரிகள் மூலம் அரசாங்கத்துக்கு கிடைக்கும் வருமானம் எவ்வளவென்பதையும்;

(iv) இறுதியாக மேற்கொள்ளப்பட்ட வரி திருத்தத்தின் போது புகைப்பொருள் வகை சார்ந்த ஓர் உற்பத்திக்கு (சிகரெட்) அறவிடப்பட்ட வரித் தொகை எவ்வளவென்பதையும்;

(v) வரி அதிகரிப்புக்கு முன்னர் மேற்படி உற்பத்தியொன்றின் சந்தை விலை எவ்வளவென்பதையும்;

(vi) வரித் திருத்தத்துக்கு பின்னர் உற்பத்தியொன்றின் சந்தை விலை எவ்வளவென்பதையும்;

(vii) சிகரெட் உற்பத்திகள் மீது வரி அறவிடுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(viii) அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் சிகரெட் உற்பத்தியை அதிகரிப்பதற்கு வசதி அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

706/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தல்விட்டிகல நீர்த்தேக்கக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை;

(iii) மேற்படி கருத்திட்டத்துக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(iv) இதுவரை மேற்படி கருத்திட்டத்துக்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(v) தற்போது மேற்படி கருத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளமையை அறிவாரா;

(vi) மேற்படி கருத்திட்டம் தொடர்பில் எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

986/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை தபால் திணைக்களம் பெற்றுக்கொண்ட தொழிற்பாட்டு இலாபம்/நட்டம் ஆண்டுவாரியாகத் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தற்போது இயங்கும் தபால் நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) புதிதாகத் தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் தபால் நிலையங்கள் யாவை என்பதையும்;

(iv) புதிய தபால் நிலையமொன்றைத் தாபிக்கும்போது கவனத்திற் கொள்ளப்படும் விடயங்கள் யாவை என்பதையும்;

(v) தற்போது திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) திணைக்களத்திடம் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றுள் ஏலம் விடுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vii) மேற்படி திணைக்களத்தை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1218/2025

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் தற்போதுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக்கட்டிடங்களுள் பல கட்டடங்கள் 75 ஆண்டுகளையும் விட பழமையானவை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அக்கட்டடங்களுள் தற்போது பயன்படுத்த முடியாமலும் பழுதடைந்த நிலையிலும் உள்ள கட்டடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அக்கட்டடங்களைப் புனரமைப்பதற்கான வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் எக்காலப்பகுதியில் செயற்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1667/2025

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இஸ்ரேலில் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எதிர்காலத்தில் தொழிலில் ஈடுபடுவதற்காக இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் புதிய வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2182/2026

கௌரவ சுனில் ரத்னசிறி,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் - ஹபரணை புகையிரத வீதிக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) அதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த செலவு யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட கம்பெனி யாதென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் காலவரையறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காகக் கையகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றுள் இழப்பீடு செலுத்தி கையகப்படுத்தப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இழப்பீடு செலுத்தி கையகப்படுத்தப்பட்ட காணிகளை தற்போது இருப்பாட்சி தரப்பினர்/நபர்கள் யாவரென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உத்தேசிக்கப்படுகின்றதா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கான கரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2185/2026

கௌரவ அஜித் கிஹான்,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'தித்வா சூறாவளி' காரணமாக புத்தளம் மாவட்டத்திலுள்ள இறால் செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான ஏதேனுமொரு வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) இறால் தொழில்துறை நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான தொழில்துறைகளில் ஒன்றாக இருப்பதனால், மேற்படி தொழில்துறையை முன்னேற்றுவற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(v) இறால் செய்கையாளர்களின் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் நிலவும் பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2191/2026

கௌரவ றுவன் விஜேவீர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டின் பாடசாலைக் கட்டமைப்பில் அதிபர்களாக சேவையாற்றும், இலங்கைக் கல்வி நிருவாக சேவை, இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவையைச் சார்ந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி 03 சேவைகளைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், அதிபர்களாகச் சேவையாற்றும் போது, அவர்கள் பெறும் சம்பளத்திற்கு மேலதிகமாக அவர்களுக்குரித்தாகும் கொடுப்பனவுகள், ஒவ்வொரு சேவைக்கேற்ப வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பதவியுயர்வு பெறும் பொருட்டு, தேசிய பாடசாலையொன்றின் அதிபராக சேவையாற்றியிருப்பது கட்டாயமானதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறாக சேவையாற்ற வேண்டிய கால வரையறை யாதென்பதையும்;

(v) இலங்கை அதிபர் சேவையின் தரம் III இற்கு நியமனம் பெறும் ஓர் உத்தியோகத்தர் தரம் II இற்கும், தரம் I இற்கும் பதவியுயர்வு பெறுவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(vi) மேற்படி பதவியுயர்வுகளைப் பெறுவதற்காக மேற்படி உத்தியோகத்தர்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் யாவையென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, ஆகஸ்ட் 20, வியாழக்கிழமை)**

893/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' அல்லது 'காணி உரிமம்' இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் ஆட்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(v) வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

894/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2017.01.01 திகதி தொடக்கம் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேசச் செயலாளர் பிரிவில், அரசாங்கத்தினால் 'அளிப்புப் பத்திரங்கள்' அல்லது 'காணி உரிமம்' ஊடாக வழங்கப்பட்ட அரச காணிகளில் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய தகவல்கள் என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

895/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) காணியற்ற மக்கள் தங்களுக்குக் காணியொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 2017.01.01 முதல் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதிக்குள் கோரளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலகத்தில் விண்ணப்பத்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை, பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கோரளைப்பற்று தெற்கு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளில் குடியிருப்பவர்களில் பலருக்கு இன்று வரை அளிப்புப் பத்திரம் அல்லது காணி உரிமம் வழங்கப்படாதுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அம் மக்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் விபரங்கள் யாவை;

(iii) அம் மக்களுக்கு இதுவரை காணி உறுதி அல்லது காணி உரிமம் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஆகஸ்ட் 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

785/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெலிசர டிப்போவுக்குச் சொந்தமான, இன்றளவில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு தகுதியான நிலையிலுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி டிப்போவில் தற்பொழுது நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) வட கொழும்பு போதனா வைத்தியசாலை ராகம நகரில் அமைந்துள்ளதால், ராகம நகரிலிருந்து காலை, பகல் மற்றும் மாலை வேளைகளில் தூரப் பயணப் பேருந்துச் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

903/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீராவோடை அரசாங்க வைத்தியசாலை நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) அதன் காரணமாக வைத்தியசாலைக்கு வருகை தருகின்ற நோயாளர்கள் அதிகளவான சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையை சகல வசதிகளையும் கொண்ட வைத்தியசாலையாக முன்னேற்றுவதற்கு ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

910/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, மாளிகாவத்தை பிரதேசத்தில் சிறுநீரக வைத்தியசாலையொன்று அமைந்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் வைத்தியர், தாதியர், நிறைவுகாண் மருத்துவ வல்லுநர் மற்றும் சிற்றூழியர் பதவிகளில் தற்போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

948/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் முதன்முறையாக வெளிநாடு சென்றுள்ள வீட்டுப் பணியாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்கள் சென்ற நாடுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வீட்டுப் பணியாளர்களுள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வழங்கப்படும் பயிற்சியைப் பெற்று மற்றும் பெறாமல் வெளிநாடு சென்றவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி பணியகத்தின் சுற்றுநிருபத்தின்படி முதன்முறையாக வெளிநாடு செல்லும் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பயிற்சியின் தன்மை யாதென்பதையும்;

(v) முறையான பயிற்சியைப் பெறாமல் வெளிநாடு செல்லும் நபர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுவதை அறிவாரா என்பதையும்;

(vi) ஆமெனில், முறையான பயிற்சியின்றி வெளிநாடு செல்வதைத் தடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1038/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி வங்கிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கிராமிய வங்கிகளுள் 2000 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்துள்ள வங்கிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி வங்கிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) இந்நிலைமையின் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் வைப்பாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) மேற்படி வைப்பாளர்களுக்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(vii) மேற்படி வங்கிகளின் நிதி மோசடி தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு அதற்குப் பொறுப்புக் கூறவேண்டிய நபர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1077/2025

கௌரவ ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகளாவிய மசகு எண்ணெய்த் விலைகள் மற்றும் இறக்குமதிச் செலவுகள் மீது இஸ்ரேல் - ஈரான் மோதலின் தாக்கம் மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) எரிபொருள் விலை அதிகரிப்பு, பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவு ஆகியவற்றைத் தணிப்பதற்காக நடைமுறையிலுள்ள அவசர ஏற்பாட்டு நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) எரிபொருள் இறக்குமதிகளைப் பல்வகைப்படுத்துவதற்கு அல்லது நீண்டகால விநியோக ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதேனும் மூலோபாயம் உள்ளதா என்பதையும்;

(iv) வர்த்தக மார்க்கங்களிலான தடங்கல்கள் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகங்களில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து மதிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) கப்பல் காப்புறுதிக் கொடுப்பனவுகள் மற்றும் சரக்குச் செலவுகள் இலங்கையின் வர்த்தகத்தைப் பாதிக்கின்றனவா என்பதையும்;

(vi) மோதலின் பக்கவிளைவுகளுக்கு முகம்கொடுப்பதற்காக காணப்படும் இராஜதந்திர ரீதியிலான ஒருங்கிணைப்பு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சென்மதி நிலுவை, வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் கடனை மீளச் செலுத்துதல் ஆகியவற்றின் மீது அதிகரிக்கும் எண்ணெய் விலைகள் ஏற்படுத்தக்கூடியதாக எதிர்வுகூறப்படும் தாக்கம் யாது என்பதையும்;

(ii) பாதிக்கப்படக்கூடிய துறைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இந்த அதிர்ச்சிகளிலிருந்து பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்குத் தயார்செய்யப்பட்டுள்ள நிதிய அல்லது நாணயக் கருவிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1249/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கமத்தொழில் திணைக்களத்தில், மண் பரிசோதனைக்கான வழிமுறையொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வழிமுறை யாதென்பதையும்;

(iii) மண் பரிசோதனைச் செய்யப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்;

(iv) மண் பரிசோதனைக்காக இற்றைவரை நிறுவப்பட்டுள்ள ஆய்வுக்கூடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(vi) 2024 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை பரிசோதனைச் செய்யப்பட்ட மண் மாதிரிகளின் எண்ணிக்கை, அந்த மண் மாதிரிகள் பெறப்பட்ட இடங்களின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1365/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் 2025ஆம் ஆண்டில் அம்பாறை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி பற்றிய விபரங்கள், ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) தில்லையாறு-சம்புக்களப்பு, அட்டாளைச்சேனை-கோணாவத்தை ஆகிய பிரதேசங்களிலுள்ள வடிகால் கட்டமைப்புகளில் காணப்படும் அடைப்புகள் காரணமாக, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று மற்றும் ஆலையடிவேம்பு பிரதேசங்களில் வாழும் மக்கள் ஒவ்வொரு வருடமும் வெள்ளத்தினால் பாதிக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி வடிகால் கட்டமைப்புகளிலுள்ள அடைப்புகளை நீக்கி, மேற்படி பிரதேச மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகச் செயற்படுத்தப்படவுள்ள திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1375/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றளவில் இலங்கையிலுள்ள பழக்கப்படுத்தப்பட்ட யானைகளினதும் கொம்பன் யானைகளினதும் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி யானைகளின் உரிமையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) மேற்படி யானைகளை தம்வசம் வைத்திருப்பதற்கான உரிமப்பத்திரம் வழங்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் யாவை;

(iv) மேற்படி யானைகள் தொடர்பில் பின்னாய்வு செய்வதற்கும் தொடர்ச்சியாக ஆராய்ந்தறிவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதா;

(v) ஆமெனில், அது தொடர்பில் அமுலில் உள்ள பொறிமுறை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1852/2026

கௌரவ லால் பிரேமநாத்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கம் இடையீடு செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்குகையில், ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் அதன் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை வழங்குவதாக கூறி மேற்கொள்ளப்படும் தீத்தொழில்கள் மற்றும் மோசடிகளை தடுப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசேட விசாரணை பொறிமுறை யாதென்பதையும்;

(iii) விண்ணப்பதாரியொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களுக்கு இணையவழி ஊடாக விண்ணப்பித்து பின்னர் அவற்றை கைவிடுவதால் ஏற்படும் தவறான பயன்பாடுகளை தடுப்பதற்கு தகவல் தொழில்நுட்பத் தீர்வொன்று செயற்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மை நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் சீர்கேடுகள் இடம்பெறும் நிறுவனங்களின் உரிமங்களை இரத்துச் செய்வதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) அந்த நடவடிக்கைகள் மூலம் வெளிநாட்டு தொழில்வாய்ப்புத் துறையை ஊழலற்ற வினைத்திறன்மிக்க சேவையாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் கால வரம்பு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?